

வருகிற ஜூன் 11ஆம் தேதி தமிழ்நாடு முதலமைச்சரும், கழகத் தலைவருமான தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் ஈரோடு மத்திய மாவட்டம் பெருந்துறையில் நடைபெறும் அரசு விழாவில் கலந்துகொண்டு பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்க உள்ளார். அதற்கான இடத்தினை தேர்வு செய்து நிகழ்ச்சி நடைபெறுவதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் மாவட்ட கழக செயலாளரும், அமைச்சருமான சு.முத்துசாமி நேரில் பார்வையிட்டு ஆலோசனைகள் வழங்கினார். நிகழ்வில் மத்திய மாவட்ட கழக பொறுப்பாளர் தோப்பு என்.டி.வெங்கடாசலம், ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், ஒன்றிய கழக செயலாளர் பெருந்துறை கே.பி.சாமி, பெரியசாமி, மொடக்குறிச்சி சு.குணசேகரன், ஓ.சி.வி.ராஜேந்திரன், அகரம் திருமூர்த்தி, ஜி.கே.செல்வன், மாணவரணி கோபால் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



நாமக்கல் கிழக்கு மாவட்டத்தில் உள்ள தி.மு.க. நிர்வாகிகள், கிளைச் செயலாளர்கள், பி எல் ஏ 2 வைச் சேர்ந்த நிர்வாகிகளின் குடும்பத்தில் உள்ள குழந்தைகளின் கல்வி மற்றும் உயர் கல்விக்கு நாமக்கல் கிழக்கு மாவட்ட திமுக சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் கல்வி உதவித்தொகையை அமைச்சர் மதிவேந்தன், நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் ஆகியோர் கலந்துகொண்டு 57 மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை வழங்கினர். இந்நிகழ்ச்சியில் ஒன்றிய கழக செயலாளர்கள் ராசிபுரம் ஜெகநாதன், நாமக்கல் பழனிவேல், மோகனூர் நவலடி, துணை மேயர் பூபதி, நகர செயலாளர் ராணா ஆனந்த், சிவகுமார் மற்றும் கழக நிர்வாகிகள் சார்பு அணி நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாள் விழா!

# திருப்பூர் வடக்கு மாவட்டம் முழுவதும் நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்பாகக் கொண்டாடுவீர்!

## மாவட்டப் பொறுப்பாளர், மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார் வேண்டுகோள்!

திருப்பூர், ஜூன் 3-

திருப்பூர் வடக்கு மாவட்டத்தில் ஜூன் 3 அன்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்த நாள் விழாவை செம்மொழி நாளாக கொண்டாட வேண்டுமென அறிவித்த கழக தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களின் அறிவிப்பின்படி திருப்பூர் வடக்கு, அவினாசி சட்டமன்ற தொகுதிகளுக்குட்பட்ட பகுதிகளில் சிறப்பாக கொண்டாட வேண்டுமென திருப்பூர் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர், மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார் வேண்டுகோள் விடுத்துள்ளார்.



அறிக்கை வருமாறு:-

திருப்பூர் வடக்கு மாவட்டத்தில் ஜூன் 3 அன்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்த நாள் விழாவை செம்மொழி நாளாக கொண்டாட வேண்டுமென அறிவித்த கழக தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி திருப்பூர் அவினாசி சாலை, 15 வேலம்பாளையத்தில் அமைந்துள்ள வடக்கு மாவட்டக் கழக அலுவலகத்தில் உள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு இன்று (03.06.2025 -செவ்வாய்க்கிழமை) காலை 9.00 மணியளவில் மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்படுகிறது. இதேபோல் திருப்பூர் வடக்கு மாநகரம், ஒன்றியம், நகரம், பகுதி, வட்டம், வார்டு, கிளைக் கழகங்கள் தோறும் கலைஞரின் திருஉருவச் சிலைக்கும், சிலை இல்லாத இடங்களில் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து, மலர்தூவி மரியாதை செலுத்தி முதியோர் இல்லங்கள், ஆதரவற்றோர் இல்லங்கள், பார்வையற்றோர் இல்லங்கள், மாணவர் விடுதிகள், கருணை இல்லங்கள், பெண்கள் காப்பகங்கள், மனநலகாப்பகம், பார்வையற்றோர் இல்லம் போன்ற இடங்களில் காலை, மதியம், இரவு உணவுகள் வழங்கியும், மாநகராட்சி, நகராட்சி மற்றும் ஊராட்சிகளில் பணிபுரியும் தூய்மைப் பணியாளர்களுக்கு உணவு, புத்தாடை மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கியும், இலவச கண் மருத்துவ சிகிச்சை முகாம், இரத்த தான முகாம்கள் நடத்தியும் ஜூன் மாதம் முழுவதும் கலைஞர் பிறந்தநாள் விழா நினைவு பேச்சுப் போட்டிகள், கட்டுரை, கவிதை போட்டிகள், கபாடி, கிரிக்கெட் போட்டிகள் போன்று பல்வேறு விளையாட்டுப் போட்டிகளையும் சிறப்பாக நடத்திட வேண்டுமாய் அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

அதுசமயம், நிகழ்ச்சிகள் நடைபெறும் இடங்களில் திருப்பூர் வடக்கு மாவட்டத்தைச் சேர்ந்த மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, வட்டக் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், முன்னாள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், நகர மன்ற தலைவர்கள், பேரூராட்சி மன்ற தலைவர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், சார்பு அணிகளான இளைஞர் அணி, மாணவர்

அணி, மகளிர் அணி, இலக்கிய அணி, கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை, தொண்டரணி, தொழிலாளர் அணி, மகளிர் தொண்டரணி, வழக்கறிஞர் அணி, மீனவரணி, நெசவாளர் அணி, விவசாய அணி, விவசாய தொழிலாளர் அணி, பொறியாளர் அணி, மருத்துவ அணி, வர்த்தகர் அணி, ஆதிதிராவிடர் நலக்குழு அணி, சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு, தகவல் தொழில்நுட்ப அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி, சுற்றுச்சூழல் அணி, அமைப்பு சாரா தொழிலாளர் அணி, அயலக அணி, தொழிலாளர் முன்னேற்றச்சங்கம் ஆகிய அணிகளின் நிர்வாகிகள் மற்றும் கழக முன்னோடிகள், கழக தோழர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு செம்மொழி நாயகர் கலைஞரின் பிறந்த நாளை சிறப்பாக கொண்டாடுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன் என்று அவரது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாள் விழா!

# கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டத்தில் சிறப்பாகக் கொண்டாடுவீர்!

## மாவட்டக் கழகச் செயலாளர் தளி ஒய்.பிரகாஷ் அறிக்கை!

கிருஷ்ணகிரி, ஜூன். 3-

கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டத்தில் முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் பிறந்த நாளை முன்னிட்டு ஒசூர், தளி மற்றும் வேப்பனப்பள்ளி தொகுதிகளில் மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர், வார்டு, ஊராட்சி, கிளை நல உதவிகள் வழங்கி சிறப்பாக கொண்டாடப்பட வேண்டும் மாவட்டச் செயலாளர் ஒய்.பிரகாஷ் எம்.எல்.ஏ. அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



அவரது அறிக்கை வருமாறு:-

இன்று (ஜூன் 3) முத்தமிழ் அறிஞர் தலைவர் அவர்களின் பிறந்த நாள் விழாவையும் மற்றும் 4 ஆண்டு சாதனையை விளக்கி துண்டு பிரசுரம் வழங்கியும் கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட திமுக சார்பில் ஒசூர் மாநகராட்சி 4 பகுதிகளிலுள்ள 45 வார்டுகளிலும், ஒன்றிய பகுதிகளிலுள்ள 179 ஊராட்சிகளிலும், தேன்கனிக்கோட்டை மற்றும் கெலமங்கலம் பேரூராட்சிகளில் உள்ள 33 வார்டுகளிலும், மொத்தம் 78 வார்டுகளிலும் ஆக மொத்தம் 662 இடங்களில் இனிப்புகள் வழங்கியும், அன்ன தானம் வழங்கியும், பள்ளி மாணவர்களுக்கு கல்வி உபகரணங்கள், மருத்துவ முகாம்கள், இரத்ததான முகாம்கள் மரக்கன்று நடுதல் மற்றும் ஏழை எளியோருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கி ஆண்டு முழுவதும் சிறப்பாக கொண்டாடிட வேண்டும்.

அதுசமயம் கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டத்தை சேர்ந்த முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக் குழு உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், மாநில, மாவட்ட, மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர் அனைத்து அணிகளின் தலைவர்கள், அமைப்பாளர்கள், துணை தலைவர்கள், துணை அமைப்பாளர்கள், நிர்வாகிகள் மற்றும் BLA2, BLC, கழக தோழர்களும் அவரவர் பகுதிகளில் இனிப்புகள் வழங்கி அன்னதானம் வழங்கி பள்ளி மாணவர்களுக்கு கல்வி உபகரணங்கள், மருத்துவ முகாம்கள், இரத்ததான முகாம்கள் மரக்கன்று நடுதல் மற்றும் ஏழை எளியோருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்பாக கொண்டாடுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்டச் செயலாளர் ஒய்.பிரகாஷ் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## தமிழினத் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் 102வது பிறந்தநாள் விழா - செம்மொழி நாள் விழா !

# கோவை வடக்கு மாவட்டம் முழுவதும் நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்பாகக் கொண்டாடுவீர் !

## மாவட்ட கழகச் செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி அறிக்கை!

கோவை, ஜூன் 3-

இந்தியாவிற்கே வழிகாட்டிடும் திராவிட மாடல் அரசின் தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் தளபதி அவர்களின் வழிகாட்டுதலின்படி தமிழினத் தலைவர், முத்தமிழறிஞர், செம்மொழி நாயகர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்தநாள் விழாவை செம்மொழி நாள் விழாவாக கோவை வடக்கு மாவட்டம் முழுவதும் நலத்திட்ட உதவிகள் வழங்கி மிகச் சிறப்பாக கொண்டாடிட வேண்டுமென மாவட்ட கழகச் செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



அவரது அறிக்கை வருமாறு :-

தமிழே உயிராக, தமிழினமே உணர்வாக, தமிழர் நலனும் தமிழ்நாட்டின் வளர்ச்சியுமே வாழ்நாள் செயல் திட்டமாகக் கொண்ட ஓய்வில்லாச் சூரியன்; தனது 94 ஆண்டு ஆயுட்காலத்தில் 80 ஆண்டுகால பொது வாழ்க்கைக்குச் சொந்தக்காரர், ஒரு நூற்றாண்டுகால திராவிட இயக்க வரலாற்றில் முக்கால் நூற்றாண்டு காலப் பங்களிப்பாளர், அரை நூற்றாண்டு காலம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராக இருந்து தமிழ்நாட்டு அரசியலின் அச்சாணியாக செயல்பட்டவர், களம் கண்ட 13 தேர்தல்களிலும் வெற்றி கண்ட சாதனையாளர், ஐந்து முறை தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்று மாநிலத்தின் ஒவ்வொரு குடும்பத்திற்கும் நலன் விளைவிக்கும் திட்டங்களை வழங்கி தலைவர்' கலைஞர் அவர்களின் 102வது பிறந்தநாள் விழாவான இன்று (ஜூன் 3ம் தேதி) கோவை வடக்கு மாவட்டத்திற்குட்பட்ட ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்டக் கழகம், கிளைக் கழகம், ஊராட்சி கழகங்கள் என மாவட்டம் முழுவதும் அனைத்து இடங்களிலும் கலைஞரின் திருவுருவப்படம் அலங்கரித்து வைக்கப்பட்டு மலர் தூவி மரியாதை செலுத்தி, கழக கொள்கை பாடல்களை ஒலிபரப்ப செய்து, பொதுமக்களுக்கு இனிப்புக்கள் வழங்கியும், பல்வேறு முதியோர் இல்லங்கள், ஆதரவற்றோர் இல்லங்கள், பார்வையற்றோர் இல்லங்கள், மாணவர் விடுதிகள், கருணை இல்லங்கள், பெண்கள் காப்பகங்கள், மனநலகாப்பகம், பார்வையற்றோர் இல்லம் போன்ற இடங்களில் வாழ்கின்றவர்களுக்கு காலை, மதியம், இரவு உணவுகள் வழங்கியும், மாநகராட்சி, நகராட்சி, மற்றும் ஊராட்சிகளில் பணிபுரியும் தூய்மைப் பணியாளர்களுக்கு உணவு, புத்தாடை மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கியும், இலவச கண் மருத்துவ சிகிச்சை முகாம், இரத்த தான முகாம்கள் நடத்தியும் ஜூன் மாதம் முழுவதும் கலைஞர் பிறந்தநாள் விழா நினைவு பேச்சுப் போட்டிகள், கட்டுரை, கவிதை போட்டிகள், கபாடி, கிரிக்கெட் போட்டிகள் போன்று பல்வேறு விளையாட்டுப் போட்டிகளையும் சிறப்பாக நடத்திட வேண்டுமாய் அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

கோவை வடக்கு மாவட்டக் கழகத்தின் சார்பில், ஆர்.எஸ்.புரம் பகுதியில் அன்னபூர்ணா ஹோட்டல் அருகில் இருந்து கழக உடன்பிறப்புகளுடன் ஊர்வலமாக சென்று காலை 10.00 மணியளவில் ஆர்.எஸ்.புரம் தபால் நிலையம் முன்பு அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள கலைஞரின் திருவுருவப் படத்திற்கு மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்படுகிறது.

அதுசமயம் கோவை வடக்கு மாவட்டத்திற்குட்பட்ட மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி, ஒன்றிய, நகர, பேரூர், வட்ட கழக செயலாளர்கள், சார்பு அணிகளின் தலைவர்கள், அமைப்பாளர்கள், துணை தலைவர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் உயிரிலும் மேலான அன்பு உடன்பிறப்புகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன் என்று அவரது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாள் விழா!

# திருச்சி மத்திய - வடக்கு மாவட்டத்தில் நல உதவிகள் வழங்கி சிறப்பாகக் கொண்டாடுவீர்!

## மாவட்டச் செயலாளர்கள் க.வைரமணி - ந.தியாகராஜன் அறிக்கை!

திருச்சி, ஜூன். 3-

திருச்சி மத்திய மாவட்ட தி.மு.க. செயலாளர் க.வைரமணி, வடக்கு மாவட்ட திமுக செயலாளர் ந.தியாகராஜன் MLA ஆகியோர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-





தமிழினத்தலைவரும், முத்தமிழ் அறிஞரும் முன்னாள் முதலமைச்சருமான மறைந்த கலைஞர் அவர்களின் 102வது பிறந்தநாளை முன்னிட்டு திருச்சி மத்திய,வடக்கு மாவட்ட திமுக சார்பில் அவரது பிறந்தநாளான இன்று (03.06.2025ம் செவ்வாய்கிழமை) காலை: 8.00 மணியளவில் திருச்சி கலைஞர் அறிவாலயத்தில் உள்ள அவரது திருவுருவச்சிலைக்கு கழக முதன்மை செயலாளரும், நகராட்சி நிர்வாக துறை அமைச்சருமான கே.என்.நேரு வழிகாட்டுதலின்படி, மத்திய மாவட்ட செயலாளர் க. வைரமணி, தலைமையிலும், வடக்கு மாவட்ட செயலாளர் காடுவெட்டி ந.தியாகராஜன் MLA, மாநகர செயலாளர் மு.அன்பழகன், பெரம்பலூர் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. கே. என். அருண் நேரு ஆகியோர் முன்னிலையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்படுகிறது.

இந்நிகழ்ச்சியில் திருச்சி மத்திய,வடக்கு மாவட்ட, மாநகர, அனைத்து ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், கிளை கழக நிர்வாகிகள், முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் தலைமைச்செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் பொறுப்பாளர்கள் கழக முன்னோடிகள், செயல் வீரர்கள் அனைவரும் தவறாது கலந்துகொண்டு மறைந்த தலைவர் கலைஞர் அவர்களுக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்திட வேண்டுகிறோம்.

அதனை தொடர்ந்து மாவட்ட, மாநகர அனைத்து ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், கிளை கழங்களில் மறைந்த தலைவர் கலைஞர் அவர்களின் திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து, பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கியும், நலத்திட்ட உதவிகள் வழங்கிட, வேண்டுமென கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு மாவட்டச் செயலாளர்கள் க.வைரமணி, ந.தியாகராஜன் ஆகியோர் அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.